நிலையாக இருப்பதும் மற்றும் உறுதியாக இருப்பதும் வெற்றிக்கான வழிகள்

நம்மில் எவருக்கும் சரியான முறையில் வாழ்வதற்கென ஒரு தெளிவான பாதை இல்லை. சோதனைகள், இன்னல்கள், கஷ்டங்கள், கவலைகள் மற்றும் பயம் இவை அனைத்தும் நமது வாழ்வின் ஒரு பகுதியாகும் . இன்னும் இஸ்லாத்தை நிலை நாட்டுவதற்கான பாதையில், யார் தங்களை அல்லாஹ்வுக்காக அர்ப்பணிக்க தயாராகி விட்டார்களோ, அவர்களுக்கு இவை இன்னும் சற்று அதிகமாகவே இருக்கும்.

அல்லாஹ் ஸுப்ஹானஹுதஆலா நமக்காக அமைத்துள்ள இந்த எடுத்துக்காட்டுகள் வெறுமென விவாதத்திற்கு மட்டுமல்ல மாறாக அவைகள் நம்மை வழி நடத்துவதற்கு ஆகும். நாம் நமது அன்பிற்குரிய நபி (ஸல்) அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது என்னவென்றால் பொறுமையாக இருத்தலும், நிலையாக இருத்தலும் மற்றும் உறுதியான நிலைபாடும் ஆகும். இவைகள் நம் வாழ்க்கைக்கு திறவுகோலாக அமைகின்றன. இந்த உலகத்தில் நாம் அனுபவிக்கும் சோதனைகளும் இன்னல்களும் கடலில் இருக்கக்கூடிய நுரைகளைப் போல ஆனால் இவைகள் நாளை மறுமை நாளில் அல்லாஹ்விடமிருந்து மகத்தான வெகுமதிகளைப் பெறுவதற்கு நம்மை தகுதியுடையவர்களாக ஆக்குகிறது.

நிலையாக இருப்பதும் மற்றும் உறுதியாக இருப்பதும் என்றால் என்ன?

அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி ஒரு வாக்கை நிறைவேற்றுவதற்காக அந்த காரியத்தில் உண்மையாகவும் உறுதியாகவும் நிலைத்து நிற்பதற்கு இஸ்திகாமத் என்று கூறப்படும். நாம் நமது கஷ்டமான சூழ்நிலைகளில் வாழும் பொழுது இந்த அழகிய பண்பின் பிரதிபலிப்பு நமக்கு உதவியாக இருக்கும். நம் வாழ்வில் எவ்வளவு துன்பங்கள், இழப்புகள் மற்றும் சவால்கள்

வந்தாலும் நாம்மை பின்வாங்கச் செய்யாத ஒரு ஆற்றல் இந்த பண்பு இருக்கிறது.

அஸிமத்: நாம் நம் வாழ்க்கையை வீணாக கழிக்க விரும்புகிறோமா, அல்லது நமது வாழ்க்கையை ஒரு வட்டத்திற்குள் மட்டுமே அமைத்துக் கொள்ள விரும்புகிறோமா அல்லது சூழ்நிலைகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு இறைவனின் வழிகாட்டுதலின் படி முன்னேறி செல்கிறோமா என்பதை வரையறுப்பதில் அஸிமத் (AZEEMAT) ஒரு தீர்க்கமான காரணியாகும்.

அபு அம்ரின் (ரலி)) அவர்களின் அறிவிக்கிறார்கள்- மேலும் அவர் அபு அம்ராஹ் சுஃப்யான் பின் அப்துல்லாஹ் அத்-தாகஃபீ (ரலி)) என்றும் அழைக்கப்படுகிறார்: நான் நபி (ஸல்) அவர்களிடம் “அல்லாஹ்வின் தூதரே! உங்களைத் தவிர வேறு யாரிடமும் நான் கேட்க முடியாத இஸ்லாத்தைப் பற்றி ஏதாவதுவிஷயத்தை எனக்கு சொல்லுங்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்"நான் அல்லாஹ்வை நம்புகிறேன் என்று கூறுங்கள் - பின்னர் நிலையாக உறுதியுடன் இருங்கள்." [முஸ்லிம், 38]

ஏன் இது இவ்வளவு முக்கியமானது?

நம் வாழ்வில் இஸ்திகாமத் மற்றும் அஸிமத் இல்லையென்றால், மன அழுத்தம், பதட்டம், மனச்சோர்வு, தற்கொலை எண்ணங்கள்,நீடிக்கும் வலிகள் , தனிமைப்படுத்தல் மற்றும் அவநம்பிக்கை போன்ற எதிர்மறையான தாக்கங்க்கள் நம் வாழ்க்கையில் ஏற்படக்கூடும். நல்ல புரிதலுடனும் மற்றும் மன உறுதியுடனும் நேரான பாதையில் செல்ல விரும்பும் ஒவ்வொரு உண்மையான முஸ்லிமுக்கும் அல்லாஹ்வின் மார்க்கத்தில் நிலைத்து நிற்பது என்பது அடிப்படை அவசியமாகும். பின்வருபவை உட்பட பல காரணங்களுக்காக இந்த விஷயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தாக இருக்கிறது

முஸ்லிம்கள் வாழும் சமூகங்களின் தற்போதைய நிலை என்ன வென்றால் சொற்களால் சொல்லவே முடியாத அளவுக்கு

தூண்டுதல்கள் மதம் மாறுவதற்கான காரணமாக இருக்கக்கூடிய ஆசைகள் விருப்பங்கள் மற்றும் சந்தேகங்கள் இவற்றிற்கு மத்தியில் இஸ்லாத்தை கடைபிடிப்பவர்களை வித்தியாசமானவர்களாக பார்க்கப்படுகிறது. தன் மார்க்கத்தை பின்பற்றுபவர் எரியும் கங்கைப் பற்றிக்கொண்டவனைப் போன்றவன்." இதைப் பற்றி அழ்ந்ட்சிந்திக்கக்கூடிய எவரும், சலஃபுக்களில் இருந்த முன்னோடிகளை விட இன்று முஸ்லிம்களுக்கு உறுதியான (இஸ்திகாமா) வழிகள் தேவை என்பதை சந்தேகிக்க மாட்டார்கள். நமது காலத்தின் ஊழல் மற்றும் உதவக்கூடிய சகோதரர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பற்றாக்குறை மற்றும் பலவீனம் காரணமாக, பெருமளவில் முயற்சி தேவைப்படுகிறது

அல்லாஹ் தன் அடியாட்கள் அனைவருக்கும் இஸ்திகாமாவைக் கட்டளையிட்டுள்ளான் என்பதையும், அவன் தூதர் (ஸல்) அவர்களுக்குக் தனித்துவமாக கட்டளையிட்டான் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

நபியே நீர் கூறுவீறாக “நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான் - ஆனால் எனக்கு வஹீ அறிவிக்கப்படுகிறது; நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒருவனேதான், ஆகவே அவனையே நோக்கி நீங்கள் உறுதியாக நிற்பீர்களாக; இன்னும், அவனிடம் நீங்கள் மன்னிப்புக் கேளுங்கள் - அன்றியும் (அவனுக்கு) இணை வைப்போருக்குக் கேடுதான்”

அல்லாஹ் உறுதியாக நிலைத்து நிற்பவர்களுக்கு நற்செய்தி கூறுகிறான்

நிச்சயமாக எவர்கள் "எங்கள் இறைவன் அல்லாஹ்தான்" என்று கூறி, (அதன் மீது) உறுதியாக நிலைத்து நின்றார்களோ, நிச்சயமாக அவர்கள்பால் மலக்குகள் வந்து, "நீங்கள் பயப்படாதீர்கள் கவலையும் பட வேண்டாம் - உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட

சுவர்க்கத்தைக் கொண்டு மகிழ்ச்சி பெறுங்கள்" (எனக் கூறியவாறு) இறங்குவார்கள். **"நாங்கள் உலக வாழ்விலும், மறுமையிலும் உங்களுக்கு உதவியாளர்கள் மேலும் (சுவர்க்கத்தில்) உங்கள் மனம் விரும்பியதெல்லாம் அதில் உங்களுக்கு இருக்கிறது - அதில் நீங்கள் கேட்பதெல்லாம் உங்களுக்குக் கிடைக்கும். (குர்ஆன்: 41:30,31)**

சில நபர்கள் இயற்கையாகவே மீள்தன்மை கொண்டவர்களாக இருந்தாலும், ஆனால், நம் வாழ்வின் கடினமான சூழ்நிலைகளை கடக்க உதவக்கூடிய பின்வரும் திறன்களை நம்மில் பெரும்பாலோர் பெறலாம்.

இஸ்லாத்தில் நிலையாக இருத்தல் (இஸ்திகாமாத்) & உறுதியாக இருத்தல் (அஸிமத்) என்பதன் பொருள்

1.அல்லாஹ்வின் மீது மட்டும் நம்பிக்கை வையுங்கள்:

நோய், அதிர்ச்சி, தனிப்பட்ட துன்பம் அல்லது இயற்கைப் பேரிடர் போன்ற ஒவ்வொரு துன்பங்களையும் எதிர்நோக்கும் திறனை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் நாம் அல்லாஹ்வின் மீது நமது முழுமையான நம்பிக்கையையும் வைத்து அதை ஒரு கத்ராக (விதி) ஏற்றுக்கொண்டு ஆதரவு தேட வேண்டும். நமது கஷ்டகாலங்களில் அல்லாஹ் மட்டுமே நம்முடன் இருப்பான் நமது கஷ்டகாலங்களில் அல்லாஹ் மட்டுமே நம்முடன் இருப்பான். அல்லாஹ் தனது படைப்புகளுக்கு எது சிறந்ததோ அதைத் திட்டமிட்டுத் தீர்மானிக்கிறான்.

அல்லாஹ்தஆலா குர்ஆனில் கூறுகிறான்: பூமியிலோ, அல்லது உங்களிலோ சம்பவிக்கிற எந்தச் சம்பவமும் - அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (லவ்ஹுல் மஹ்ஃபூள்) ஏட்டில் இல்லாமலில்லை; நிச்சயமாக அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதேயாகும். . **(குர்ஆன்: 57:22)**

2.ஒவ்வொரு சூழ்நிலையிலும் நன்றியுடன் இருக்க வேண்டும்

நாம் திருப்தியற்ற நிலையில் இருந்தாலும் அல்லாஹ் சுபஹானஹுதஆலாவுக்கு நாம் உண்மையிலேயே நன்றி உள்ளவர்களாகவும் சிறந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஏதாவது மோசமான நிலை ஏற்பட்டால். இது இன்னும் மிக மோசமான இருந்திருக்கும் என்பதை நாம் உணர்ந்து, ஏற்கனவே நம்மிடம் இருப்பதை வைத்து திருப்தி அடைய முயற்சிக்க வேண்டும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: " ஒரு முஃமீனின் நிலை எவ்வளவு அற்புதமானது! அவருக்கு என்ன நடந்தாலும் அது அவருக்கு நல்லதாகவே அமையும் - அவரைத் தவிர வேறு யாரும் இந்த நிஃமத்தை அனுபவிப்பதில்லை. அவர் ஏதேனும் நிஃமத்தை பெற்றால், அவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறார், மேலும் இந்த நிஃமத்தை அவருக்கு நன்மையைத் தரும். மேலும் அவருக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவர் பொறுமையாக இருப்பார், மேலும் இந்த துன்பமும் அவருக்கு நன்மையைத் தரும். [ஸஹீஹ் முஸ்லிம்]

3. அல்லாஹ்விடமே உதவி தேடுங்கள் & மேலும் நிராசையாக வேண்டாம்.

நமது தோல்விகளுக்கு நம்மை நாமே குற்றம் சாட்டுவதற்குப் பதிலாக, எல்லாவற்றையும் நாமே சரி செய்ய முயற்சி செய்து, எப்போதும் வழிகாட்டுதலுக்காக அல்லாஹ்வை அணுக வேண்டும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்,
"அல்லாஹ்விடம் (சுப) உதவி தேடுங்கள், மனம் தளராதீர்கள், உங்களுக்கு ஏதேனும் சிக்கல் வந்தால், நான் அதைச் செய்யவில்லை என்றால், அது அப்படியும் இப்படியும் நடந்திருக்காது என்று சொல்லாதீர்கள் , மாறாக சொல்லுங்கள்: அல்லாஹ் தான் செய்ய நாடியதை செய்தான், மேலும் உங்கள் "ஆல்" என்பது ஷைத்தானுக்கு வழி எற்படுத்துகிறது." [ஸஹீஹ் முஸ்லிம்]

4. குர்ஆனை நோக்கி திரும்புதல் &அல்லாஹ்வின் சட்டங்களை கடைபிடித்தல் மற்றும் நற்செயல்களைச் செய்தல்

இஸ்லாத்தில் உறுதியாக நிற்க குர்ஆன் முதன்மையானது. இது அல்லாஹ்வின் வலுவான கயிறு மற்றும் தெளிவான ஒளி. யார் அதைக் கடைப்பிடிக்கிறார்களோ, அவரை அல்லாஹ் பாதுகாப்பான்; எவர் அதைப் பின்பற்றுகிறாரோ அவரை அல்லாஹ் காப்பாற்றுவான்; அதன் வழியை அழைப்பவர் நேரான பாதையில் வழிநடத்தப்படுவார்.

எவர்கள் ஈமான் கொள்கிறார்களோ அவர்களை இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் உறுதியான சொல்லைக் கொண்டு அல்லாஹ் உறுதி படுத்துகின்றான் - இன்னும், அநியாயக் காரர்களை அல்லாஹ் வழி தவறச் செய்து விடுகிறான்; மேலும் அல்லாஹ், தான் எதை நாடுகின்றானோ அதைச் செய்கின்றான். . (குர்ஆன்: 14:27)

5. நபிமார்களின் வரலாறுகளைப் படிப்பது மற்றும் அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவது

இதற்கு ஆதாரம் இந்த வசனம்: மேலும் நபியே, உமது இதயத்தை உறுதிப்படுத்துவதற்காக இறைத்தூதர்களின் வரலாறுகளை உமக்குக் கூறினோம்.மேலும் இந்த சூராவில் காஃபிர்களுக்கு ஓர் எச்சரிக்கையும், முஃமின்களுக்கு நினைவூட்டலும் வந்து இருக்கின்றன (குர்ஆன் *11:120)*.

6. அல்லாஹ்வை நினைவு கூறுதல் (திக்ர்) & அவனிடம் மன்னிப்பை நாடுதல்.

இது இஸ்லாத்தில் உறுதியாக நிலைத்து நிற்பதற்கு(இஸ்திகாமாத்) சிறந்த வழிமுறைகளில் ஒன்றாகும். நாம் அல்லாஹ்வின் கிருபையையும் கருணையையும் அவனது திக்ரின் மூலம் தேட வேண்டும் மேலும் அவனிடம் மன்னிப்பை மீண்டும் மீண்டும் கேட்க வேண்டும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யாரேனும் ஒருவர் தொடர்ந்து மன்னிப்புக் கேட்டால், அல்லாஹ் அவருக்கு ஒவ்வொரு துன்பத்திலிருந்தும் ஒரு வழியையும், ஒவ்வொரு கவலையிலிருந்தும் நிவாரணத்தையும் ஏற்படுத்துவான், மேலும் அவர் எதிர்பார்க்காத இடத்திலிருந்து அவருக்கு வழங்குவான். [சுனன் அபு தாவூத்]

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் (போரில் எதிரியின்) கூட்டத்தாரைச் சந்திப்பீர்களாயின் உறுதியாக இருங்கள் - அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுங்கள் (திக்ர்) செய்யுங்கள் - நீங்கள் வெற்றியடைவீர்கள். (குர்ஆன் *8:45)*.

திக்ர் & இஸ்திஃபர் இஸ்லாத்தில் உறுதியாக நிலை நிற்பதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றன

7. பயிற்சி மற்றும் கல்வி

ஈமானில் படிப்படியாக முன்னேற நம்பிக்கையின் மீது பயிற்சி செய்வது, அறிவின் அடிப்படையில் முன்னேற , சாஹிஹ் ஆதாரங்களின் அடிப்படையில் கல்வியின் மீது பயிற்சி செய்வது வெறும் போலித்தனமாகவும் மற்றும் கண்மூடித்தனமாகவும் இஸ்லாத்தைப் பின்பற்றுவது இஸ்லாத்தில் உறுதியாக நின்று பின்பற்றுவதற்கு எதிரானதாகும்.

நம்பிக்கையின் மீது பயிற்சி என்பது இதயத்தையும் உணர்வையும் அல்லாஹ்வின் பயத்தாலும் நம்பிக்கையாலும் அன்பாலும் நிரப்புவதாகும். மனிதர்களின் வார்த்தைகளுக்கு அதிகமான கவனம் செலுத்தி, குர்ஆன் மற்றும் சுன்னாவின் நூல்களைப் புறக்கணிப்பது மிகவும் எதிரானதாகும்

8. மற்றவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பது (தாவா)

ஒருவர் சுறுசுறுப்பாக செயல்படக்கூடிய முக்கியமான பணிகளில் ஒன்று அல்லாஹ்வின் பக்கம் மற்றவர்களை அழைக்கும் ஒரு அற்புதமான தஃவாத் பணியாகும்.

இது நபிமார்களின் பணியாகும் இது அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து நம்மளை காப்பாற்றக்கூடிய பணியாகும்இன்னும் நம் திறனை அறிந்து பெரிய விஷியங்களை சாதிக்க உதவக்கூடிய பணியாகும்

எனவே, (நபியே! நேர்வழியின் பக்கம் அவர்களை) நீர் அழைத்துக் கொண்டே இருப்பீராக; மேலும், நீர் ஏவப்பட்ட பிரகாரம் உறுதியுடன் நிற்பீராக! (குர்ஆன் 42:15).

ஒருவர் முன்னேறவில்லை அல்லது பின்னோக்கி சென்று விட்டார் என்று கூறுவது உண்மையல்ல (நீங்கள் முன்னேறவில்லை என்றால், நீங்கள் பின்னோக்கி சென்று சென்று கொண்டிருக்கிறீர்கள் - யாரும் இங்கு நிலையானவர்கள் அல்ல). ஒரு நபர் வண்க்கவழிபாடு மற்றும் கீழ்ப்படிதல் போன்ற செயல்களில் ஈடுபடவில்லை என்றால், அவர் பாவம் மற்றும் அல்லாஹ்விற்கு மாறு செய்வதில் ஈடுபடுவார் . மேலும் அவரின் ஈமான் குறையலாம் (யாருடைய ஈமானும் நிலையானதாக இருக்காது).

தஃவாத் செய்வதற்கு சரியான வழிமுறை:- அதற்காக நேரத்தை ஒதுக்கி, மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் முயற்சி செய்து, பேசுவதன் மூலம், அப்படிப்பட்ட தஃவாத் முஸ்லிம்கள் மீது அக்கறையுள்ள கவலை உள்ள தஃவாத் ஆகுகிறது- இன்னும் அப்படிப்பட்ட தஃவாத் அவரை ஷைத்தானின் தூண்டுதல்களிலிருந்து முயற்சிகளில் இருந்தும் பாதுகாக்கிறது.

9. அல்லாஹ்வின் உதவி மற்றும் எதிர்காலம் இஸ்லாத்திற்கே உரியது என்பதில் நம்பிக்கையுடன் இருத்தல்

வெற்றி தாமதமாகும் போது நாம் இன்னும் உறுதியாக நிற்க வேண்டும். அப்பொழுதுதான் நிலையான உறுதிக்கு பிறகு நாம் வழிதவற மாட்டோம்.

மேலும் எத்தனையோ நபிமார்கள், அவர்களுடன் ரிப்பிய்யூன்கள் (என்னும் இறையடியார்களும்) பெருமளவில் சேர்ந்து (அல்லாஹ்வின் பாதையில்) போர் செய்தனர்;. எனினும், அல்லாஹ்வின் பாதையில் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களால் அவர்கள் தைரியம் இழந்து விடவில்லை, பலஹீனம் அடைந்து விடவுமில்லை. (எதிரிகளுக்குப்) பணிந்து விடவுமில்லை - அல்லாஹ் (இத்தகைய) பொறுமையாளர்களையே நேசிக்கின்றான். மேலும், "எங்கள் இறைவனே! எங்கள் பாவங்களையும் எங்கள் காரியங்களில் நாங்கள் வரம்பு மீறிச் செய்தவற்றையும் மன்னித் தருள்வாயாக! எங்கள் பாதங்களை உறுதியாய் இருக்கச் செய்வாயாக! காஃபிர்களின் கூட்டத்தாருக்கு எதிராக எங்களுக்கு நீ உதவி புரிவாயாக" என்பதைத் தவிர (இம்மாதிரி சந்தர்ப்பங்களில்) அவர்கள் கூறியது வேறெதும் இல்லை.ஆகவே, அல்லாஹ் அவர்களுக்கு இவ்வுலகத்தில் நன்மையையும், மறுமையின் அழகிய நன்மையையும் கொடுத்தான்;. இன்னும், அல்லாஹ் நன்மை செய்யும் இத்தகையோரையே நேசிக்கின்றான். (குர்ஆன்: 3:146-148)

10. பொய்யின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்வது மற்றும் அதன் மூலம் தவறான பாதையில் செல்லாமல் இருப்பது

பின்வரும் வசனம் முஃமின்களுக்கு உறுதியளிக்கிறது மற்றும் அவர்கள் உறுதியாக நிலை நிற்க உதவுகிறது

காஃபிர்கள் நகரங்களில் உல்லாசமாகத் திரிந்து கொண்டிருப்பது (நபியே!) உம்மை மயக்கி விடவேண்டாம். (குர்ஆன்: 3:196)

புத்திசாலித்தனம் உள்ளவர்களுக்கு ஒரு பாடம் உள்ளது, பொய்க்கு பயப்படவோ அல்லது அதற்கு அடிபணியவோ கூடாது.

அவன்தான் வானத்திலிருந்து மழையை இறக்கினான்; அப்பால் ஓடைகள் அவற்றின் அளவுக்குத் தக்கபடி (நீரைக் கொண்டு) ஓடுகின்றன; அவ்வெள்ளம் நுரையை மேலே சுமந்து செல்கிறது; (இவ்வாறே) ஆபரணமோ அல்லது (வேறு) சாமான் செய்யவோ (உலோகங்களை) நெருப்பில் வைத்து உருக்கும் போதும் அதைப் போல் நுரை உண்டாகின்றது; இவ்வாறு சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் அல்லாஹ் (உவமை) கூறுகிறான்; அழுக்கு நுரை (பலனற்றதாக இருப்பதால்) அழிந்துபோய் விடுகிறது; ஆனால் மனிதர்களுக்குப் பலன் அளிக்கக் கூடியதோ, பூமியில் தங்கி விடுகிறது; இவ்வாறே அல்லாஹ் உவமைகளைக் கூறுகிறான். (குர்ஆன்: 13;17)

இதயம் மற்றும் அது அனுபவிக்கும் சோதனைகள் குறித்து நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இதயங்கள் ஒன்றன் பின் ஒன்றாக சோதனைகளுக்கு ஆளாகின்றன. எந்த இதயம் அவர்களுக்கு அடிபணிகிறதோ, அந்த இதயம் ஒரு கரும்புள்ளியால் கறை படிந்திருக்கும், அவற்றை எதிர்க்கும் இதயம் மிகத் தூய்மையானதாக வெண்ணிறமாக இருக்கும் .அனைத்து இதயங்களும் இந்த இரண்டு வகையில் ஒன்றாக இருக்கும். வெள்ளை இதயம் மிகவும் வெண்மையானது, வானமும் பூமியும் இருக்கும் வரை எந்த சோதனையினாலும் பாதிக்கப்படாது, மேலும் கருப்பு இதயம் மிகவும் கறுப்பாக இருக்கிறது, மேலும் அதன் சொந்த விருப்பங்களுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்றதைத் தவிர நன்மையை அங்கீகரிக்கவோ அல்லது தீமையைத் தடுக்கவோ முடியாது. இந்த ஹதீஸ் இமாம் அஹ்மத் (ரஹ்) 5/386, மற்றும் முஸ்லீம், 1/128 மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்த ஹதிஸ் முஸ்லிம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இஸ்திகாமா என்பது சுன்னாவை சரியாகவும் துல்லியமாகவும், அலட்சியம் இல்லாமல், எந்த ஒரு தீவிரவாதம் இல்லாமலும் செய்வது - மேலும் எப்போதும் சிறந்த முடிவை அடைய பாடுபடுகிறது.

யா அல்லாஹ் அவர்களில் எங்களை ஆக்குவாயாக! யா அல்லாஹ், உறுதியுடனும், ஞானத்துடனும் எங்களை இஸ்லாத்தை கடைபிடிக்கச் செய்யும்படி எங்களை ஆக்குவாயாக . ஆமீன்.